24th January 1972]

திரு. ஜி. சுவாமிநாதன்: நடனம் என்று விளம்பரம் செய்கிறுர்கள். அதைப் பார்க்க மக்கள் போகிறபோது அங்கு ஆபாசமாக ஆடுகிறுர்கள். அதற்காக பார்ப்பவர்களை எப்படிக் கைது செய்வது? நடனம் பார்க்க மக்கள் போகிற போது, ஆடுகிறவர்கள் ஆபாசமாக ஆடுகிறுர்கள். இன்னின்னர் ஆபாச நடனம் ஆடி கைதுசெய்யப்பட்டார்கள் என்று பத்திரிகையில் பெயரைப் போடுகிறுர்கள். யார் பெயர் பத்திரிகையில் வருகிறதோ அவர்களுக்கு அதிகமான அழைப்புகள் வருகின்றன என்பதால், பத்திரிகையில் ஆபாச நடனம் ஆடுபவர் பெயரைப் போடாமல் இருக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி: பத்திரிகை உரிமை பாதிக்கப்படுவதாக அவர்கள் போராடக் கூடும். நடனம் பார்க்கப் போகிறவர்களைக் கைது செய்து விட்டால், என்ன செய்வது என்று திரு. சுவாமிநாதன் வருத்தப்பட்டார். அப்படி அவர்கள் பயப்படத் தேவையில்லை என்று கூறிக்கொள்கிறேன். (சிரிப்பு).

Fashion Dress Competition

*4 Q.—Thiru V. Isvarmurti: Will the Hon. the Chief Minister be pleased to state:

(a) whether permissions were granted for conducting fashion dress competition for adults in Madras City by the Commissioner of Police; and

(b) if so, the details thereof?

ஆடை அலங்காரப் போட்டி

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில் வயது வந்தோருக்கான ஆடை அலங்காரப் போட்டி நடத்துவதற்கு காவல் துறை கமிஷனரால் அனுமதிகள் வழங்கப் பட்டனவா?

(இ) ஆம் எனில், அவற்றின் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி: (அ) ஆம்.

(இ) உடை அழகுப் போட்டி நடத்த 1970-ம் ஆண்டில் 5 நிறுவனங் களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அவையாவன:

1. ஈவ்ஸ் வீக்லி இதழ், சென்னை.
2. கிறுஸ்துவ மங்கையர் கழகம், சென்னை.
3. தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுக்கழகச் (செயலாளர்), சென்னை.
4. டைம்ஸ் ஆப் இந்தியாவின் கிளை மேலாளர், சென்னை.
5. இந்திய நலக் கழகம், சென்னை.

1971-ஆம் ஆண்டில் அழகுப் போட்டி நடத்த இரண்டு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அவையாவன:

1. டைம்ஸ் ஆப் இந்தியாவின் கிளை மேலாளர், சென்னை.
2. தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுக் கழகத்தின் சிறப்பு அதிகாரி, சென்னை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[24th January 1972

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: தலைவரவர்களே, மாணவியர்கள் கூட இதிலே பங்கேற்பதாகத் தெரிவதால், அவர்கள் கல்லூரிகள் அல்லது பெற்றோர்கள் அனுமதி பெற்றுக்கொண்டுதான் சொல்லவேண்டும் என்ற விதி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கல்லூரிகளின் அனுமதியோடுதான் அவர்கள் அதிலே கலந்துகொள்கிறார்கள் என்று கருதுகிறேன். ஆனால் அப்படி விதி இருக்கிறதா என்பதைப்பற்றிய விவரங்கள் என்னிடம் இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: கலந்துகொள்கிற மாணவியர்கள் 18 வயதுக்குட் பட்டவர்களா அல்லது அதற்கு மேலானவர்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எனக்கு வந்துள்ள விவரப்படி, வயது வந்தவர்கள் தான் இதிலே கலந்து கொள்கிறார்கள் என்றிருக்கிறது.

திரு. எஸ். ஜெயராம செட்டியார்: தலைவரவர்களே, "ஃபாஷன்" என்பதற்கு என்ன விளக்கம் என்று தெரியவில்லை. கிருதாவைப் பெரியதாக வைத்திருப்பது நன்றாக இருக்கிறது என்று கிருதா வைத்துக்கொண் டிருந்தவர்கள், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியவுடன், அதை எடுத்துவிட்டிருக்கிறார்கள். "ஃபாஷன்" என்றால் என்ன என்று நிர்ண யிக்கும் விதி ஏதாவது இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எப்படி உடைகளை அணிவது என்று நடக்கும் போட்டியில் உடைகளை விளம்பரப்படுத்தும் அளவுக்குத்தான் தமிழ் நாடு நெசவாளர் கூட்டுறவுக் கழகம் அழகுப் போட்டி நடத்தியிருக்கிறது. மற்ற நிறுவனங்கள் நடத்தும் அழகுப் போட்டிகளும் அந்தந்த நிறுவனங் களின் விளம்பரத்துக்காகவே நடத்தப்படுகின்றன.

திரு. டி. சந்தோஷம்: தலைவரவர்களே, இப்படிப்பட்ட போட்டிகளை மிக்க பொறுப்பு வாய்ந்த ஸ்தாபனங்கள், ரோட்டரி கிளப், ஒய்.டபுள்யு.சி.ஏ. போன்ற பொறுப்பான ஸ்தாபனங்கள் நடத்துகின்றன. இதுவரை நடந்த போட்டி களில் ஏதாவது ஆட்சேபகரமான காரியங்கள் நடந்ததாகச் செய்திகள் ஏதாவது வந்திருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதுவரை அப்படிப்பட்ட தகவல் எதுவும் இல்லை.

MR. CHAIRMAN : Questions 5 to 9 are postponed.

Veterinary College, Madurai

*10 *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) whether any request has been received in 1970, from the Ramanathapuram District Development Council for starting a Veterinary College at Madurai; and

(*b*) if so, the action taken thereon by the Government?